RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING — மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 156 | ஜூன்.11, 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## "சனாதன மரபின் சிறந்த துறவி திருவள்ளுவர்" வைகாசி அனுஷத்தில் ஆளுநர் ரவி மரியாதை



சென்னை: ஜூன்.11-

பாரத சனாதன மரபின் சிறந்த துறவியும், தெய்வப்புலவருமான திருவள்ளுவருக்கு, வைகாசி அனுஷத்தில், பண்டைய தமிழ் நாட்காட்டியின் படி அவரது பிறந்தநாளில், தேசம் தனது மரியாதையை செலுத்துகிறது என தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்துள்ளார்

இதுகுறித்து ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "பாரத சனாதன மரபின் மாபெரும் தெய்வப்புலவர் திருவள்ளுவருக்கு, பண்டைய தமிழ் நாள்காட்டியின்படி, வைகாசி அனுஷத்தில், அவரது பிறந்தநாளில், தேசம் தனது மரியாதையை செலுத்துகிறது.

கம்பீரமான திருக்குறளில் பொதிந்துள்ள பக்தி, கர்மம் மற்றும் ஞான யோகங்களின் ஆரோக்கியமான கலவையுடன் ஒருங்கிணைந்த தர்ம வாழ்க்கை குறித்த அவரது போதனைகள், தனிநபர் மற்றும் கூட்டு வாழ்க்கையில் மனித குலத்தை வடிவமைத்துத் தொடர்ந்து வழிநடத்துகின்றன. இது தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் ஆட்சியாளர்கள் உள்பட அனைவருக்கும் ஒரு விரிவான மற்றும் நீடித்த கட்டமைப்பை வகுக்கிறது.

அவரது குறள்கள் ஞானத்தின் தூணாக விளங்கி, #வளர்ச்சியடைந்த பாரதத்தை நோக்கிய நமது கூட்டு தேசிய பயணத்தை ஊக்குவிக்கவும் வழிநடத்தவும் நித்திய மதிப்புகளைப் பயன்படுத்துகின்றன." என ஆளுநர் ரவி தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், அவர் திருவள்ளுவருக்கு மரியாதை செலுத்தும் புகைப்படங்களையும் ஆளுநர் மாளிகை எக்ஸ் தளம் பகிர்ந்துள்ளது.

## வித்தியாசமான தொப்பி அணிவதற்கான காரணம் என்ன? எல்.முருகன் விளக்கம்



புதுச்சேரி: ஜூன்.11-

புதுச்சேரிக்கு வந்திருந்த மத்திய அமைச்சர் முருகன் தற்போது நிகழ்வுகளில் வித்தியாசமான தொப்பி அணிந்துள்ளதற்கான காரணத்தை தெரிவித்தார். பல்வேறு அரசியல் தலைவர்களுக்கும் அடையாளமாக ஒவ்வொரு பொருளுண்டு. அந்தவகையில் மத்திய அமைச்சராக உள்ள முருகன் தற்போது வித்தியாசமான தொப்பி அணிந்து வருகிறார்.

புதுச்சேரிக்கு இரு நாள் நிகழ்வுகளில் பங்கேற்ற அவரிடம் இந்த வித்தியாச தொப்பி அணியும் காரணம் பற்றி கேட்டதற்கு, "கோயிலுக்கு முடி காணிக்கை தந்தேன். முடி வளரும் வரை தொப்பி அணிய சொன்னார்கள். அப்போது எனது நண்பர் இந்த தொப்பி தந்தார். அதை அணிந்து வருகிறேன். நல்லா இருக்குதானே" என்றார்.

அதற்கு அங்கிருந்த அமைச்சர் நமச்சிவாயம், "நேதாஜி ஸ்டைலில் இருக்கிறது," என்றார்.

## வங்கிக்கடன் மோசடி வழக்கு: விசாரணையை ஓராண்டில் முடிக்க சிபிஐக்கு ஐகோர்ட் உத்தரவு

சென்னை: ஜூன்.11-

தொழிலதிபருக்கு எதிரான வங்கிக் கடன் வழக்கு விசாரணையை ஓராண்டில் முடிக்க வேண்டும் என சிபிஐக்கு உத்தரவிட்டுள்ள சென்னை உயர் நீதிமன்றம், வழக்கில் குற்றம்சாட்டப்படாத நிலையில், வெளிநாட்டுக் குடிமகனை காலவரம்பின்றி தடுத்து வைக்க முடியாது என கருத்து தெரிவித்துள்ளது.

தொழிலதிபர் சிவசங்கரன் இந்தியாவில் ஐடிபிஐ வங்கியில் 500 கோடி ரூபாய்க்கு மேல் கடன் பெற்றார். அந்த பணத்தை சட்டவிரோதமாக பிரிட்டிஷ் வெர்ஜின் தீவில் உள்ள நிறுவனத்துக்கு பரிமாற்றம் செய்துள்ளார். மேலும், வங்கியில் பெற்ற கடன் தொகையை திருப்பிச் செலுத்தாமல் மோசடி செய்ததாக புகார் எழுந்தது. இதையடுத்து தொழிலதிபர் சிவசங்கரனுக்கு எதிராக சிபிஐ வழக்குப்பதிவு செய்தது. இந்த வழக்கில் சென்னை எழும்பூர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மோசடி தொடர்பாக சிபிஐ மேல் விசாரணையும் நடத்தி வருகிறது. அதன்படி, செஷல்ஸ் நாட்டின் குடிமகனான கார்த்திக் பார்த்திபன் என்பவருக்கு எதிராக லுக் அவுட் நோட்டீஸ் பிறப்பித்துள்ளது. இந்த நோட்டீசை ரத்து செய்யக் கோரி, கார்த்திக் பார்த்திபன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு நீதிபதி பரத சக்கரவர்த்தி முன்பு நேற்று (ஜூன் 10) விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் அஸ்வின் குமார், "இந்த வழக்கில், குற்றம்சாட்டப்பட்டவராக மனுதாரர் சேர்க்கப்படாத நிலையில் வெளிநாடு செல்ல அனுமதிக்காமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இது அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது," என வாதிடப்பட்டது.

அப்போது, சிபிஐ தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சீனிவாசன், "500 கோடி ரூபாய்க்கு மேல் மோசடி நடந்துள்ளது. இந்நிலையில், மனுதாரருக்கு எதிரான லுக் அவுட் நோட்டீசை ரத்து செய்தால் அவர் தப்பிவிடக் கூடும். அவரை இந்தியாவுக்கு கொண்டு வர, செஷல்ஸ் நாட்டுடன் இந்தியா எந்த ஒப்பந்தமும் செய்யவில்லை. எனவே, மனுதாரருக்கு எதிரான லுக் அவுட் நோட்டீசை ரத்து செய்யக்கூடாது." என வாதிடப்பட்டது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, "வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவராக சேர்க்கப்படாத நிலையில், அந்நிய நாட்டுக் குடிமகனை காலவரம்பின்றி தடுத்து வைக்க முடியாது. அவருக்கு எதிரான வழக்கில் ஓராண்டில் புலன் விசாரணையை முடிக்க வேண்டும் என சிபிஐக்கு, நீதிபதி உத்தரவிட்டார். விசாரணை முடிவில், மனுதாரருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு முகாந்திரம் இல்லை என தெரியவந்தால், அவருக்கு எதிரான லுக் அவுட் நோட்டீஸை ரத்து செய்ய வேண்டும். குற்றச்சாட்டுக்களுக்கு முகாந்திரம் இருந்தால் லுக் அவுட் நோட்டீஸை நிலுவையில் வைத்து, வழக்கை எதிர்கொள்ள செய்ய வேண்டும்." என்றார்.

மேலும், மலேசியாவில் நடக்கும் சகோதரர் திருமணத்தில் கலந்து கொள்ள மனுதாரருக்கு நிபந்தனைகளுடன் அனுமதியளித்து நீதிபதி உத்தரவிட்டார்.

## வாகன உற்பத்தி, அறிவுசார் பொருளாதாரம் உள்ளிட்ட திட்டக்குழுவின் 4 அறிக்கைகள் முதல்வரிடம் சமர்ப்பிப்பு



சென்னை: ஜூன்.11-

மாநில திட்டக்குழு தயாரித்துள்ள 4 அறிக்கைகளை முதல்வர் ஸ்டாலினிடம், திட்டக்குழு துணை தலைவரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் நேற்று வழங்கினார்.

ஊரக பகுதிகளில் வேளாண்மை சாராத வேலைவாய்ப்புகள், நீடித்த வளர்ச்சி இலக்குகள், வாகன உற்பத்தி துறையின் எதிர்காலம், அறிவுசார் பொருளாதாரம் ஆகியவை தொடர்பாக 4 அறிக்கைகளை மாநில திட்டக்குழு தயாரித்துள்ளது.

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஸ்டாலினிடம் இந்த அறிக்கைகளை திட்டக்குழுவின் அலுவல்சார் துணை தலைவரான துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று சமர்ப்பித்தார்.

திட்டக்குழுவின் செயல் துணை தலைவர் ஜெ.ஜெயரஞ்சன், தலைமைச் செயலர் நா.முருகானந்தம், திட்டம் மற்றும் வளர்ச்சி துறை செயலர் ரமேஷ் சந்த் மீனா, நிதி துறை செயலர் உதயச்சந்திரன், திட்டக்குழு உறுப்பினர் செயலர் சுதா உள்ளிட்டோர் உடன் இருந்தனர். 4 அறிக்கைகள் பற்றிய விவரம்:

வேளாண்மை சாராத வேலைவாய்ப்பு: தமிழக ஊரக பகுதிகளில் வேளாண் சாராத பணிகளின் தன்மை மற்றும் அளவை அறியும் நோக்கில், ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 75 சதவீதத்துக்கும் அதிகமான ஆண் தொழிலாளர்கள், 50 சதவீதத்துக்கும் அதிகமான பெண் தொழிலாளர்கள் வேளாண்மை அல்லாத துறைகளில் வேலை செய்யும் நிலை இருப்பது ஆய்வில் தெரியவந்துள்ளது. கடந்த 2012ம் ஆண்டுக்கு பிறகு, வேளாண் துறையின் சதவீதத்தில் 20 சதவீதம் குறைந்திருப்பதை இது காட்டுகிறது. இந்த ஆய்வின்படி, 1534 வயது இளம் தொழிலாளர்களே இந்த மாற்றத்தின் முக்கிய காரணியாக உள்ளனர். அதிக ஊதியம், நிலையான வேலைவாய்ப்பு போன்றவையே வேளாண்மை சாராத வேலைவாய்ப்புகளை நோக்கி இளைஞர்களை ஈர்த்துள்ளன.

தொலைநோக்கு ஆவணம்: 'நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான தமிழகத்தின் தொலைநோக்கு ஆவணம்' என்ற தலைப்பிலான ஆவணம் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள, 2030ம் ஆண்டுக்கான நீடித்த வளர்ச்சி இலக்குகளின்கீழ் உள்ள 17 இலக்குகள் வாரியாக அத்தியாயங்களை கொண்டுள்ளது.

மாநிலத்தின் தற்போதைய நிலை, பல்வேறு நலத்திட்டங்கள், சிறப்பு முயற்சிகள் மற்றும் கொள்கை உருவாக்கங்கள் மூலம் அரசின் முன்னெடுப்புகளை இந்த ஆவணம் விளக்குகிறது.

வாகன உற்பத்தி துறை: திட்டக்குழு, தொழில் வழிகாட்டி நிறுவனம், ஆட்டோ கார் நிறுவனத்தின் நிபுணத்துவத்துடன் இணைந்து 'தமிழகத்தில் ஆட்டோமோட்டிவ் (வாகன உற்பத்தி) துறையின் எதிர்காலம்' என்ற அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மின்சார வாகனம், ஹைப்ரிட், ஹைட்ரஜன், சிஎன்ஜி மற்றும் டீசல் உள்ளிட்ட பல தொழில்நுட்பங்களை மேம்படுத்த

வேண்டியதன் அவசியம் குறித்து இதில் கூறப்பட்டுள்ளது.


2030ம் ஆண்டுக்குள் மின்வாகனம், பேட்டரி தொழில்நுட்பம், ஆட்டோமேஷன் ஆகியவற்றில் 2 லட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதன் அவசியம் குறித்தும் கூறப்பட்டுள்ளது. ஆராய்ச்சி, மேம்பாட்டை விரிவுபடுத்துவது குறித்தும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அறிவுசார் பொருளாதாரம்: தொழில்நுட்பம், புத்தாக்கம், நிலைத்த வளர்ச்சியை அடிப்படையாக கொண்டு உற்பத்தி துறையில் வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும் என்பதை 'அறிவுசார் பொருளாதாரத்தை நோக்கி வடிவமைக்கும் பாதை' என்ற அறிக்கை பரிந்துரைக்கிறது. குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையை வலுப்படுத்துதல், வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் பொருளாதார நிலைத்தன்மை ஆகியவை இதில் முக்கிய அம்சங்களாக உள்ளன.

ஒரு ட்ரில்லியன் பொருளாதாரம்: முதல்வரிடம் திட்டக்குழு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டது தொடர்பாக செய்தியாளர்களிடம் திட்டக்குழு செயல் துணை தலைவர் ஜெ.ஜெயரஞ்சன் கூறியதாவது: 2030ம் ஆண்டுக்குள் தமிழகத்தை ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றும் தொலைநோக்கு திட்டத்தை முன்வைத்து இந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தின் தொழில் துறை வளர்ச்சி, சமூகநீதி மற்றும் அறிவுசார் பரிணாமத்தை ஒருங்கிணைக்கும் விரிவான செயல திட்டமாக இந்த அறிக்கைகள் அமைந்துள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தமிழகத்தில் வயதானவர்களை குறிவைத்து கொலை, கொள்ளைகள் அதிகரிப்பு: ஐகோர்ட் வேதனை



மதுரை: ஜூன்.11-

தமிழகத்தில் ஊரகப் பகுதிகளில் வயதானவர்களை குறி வைத்து கொள்ளை, கொலை போன்ற சம்பவங்கள் நடப்பது அதிகரித்து வருகிறது என உயர் நீதிமன்ற நீதிபதிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

மதுரையைச் சேர்ந்த் கே.கே.ரமேஷ், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், "தமிழகத்தில் பல்வேறு இடங்களில் பேருந்து நிலையங்கள், சாலை ஓரங்களில் முதியவர்களை உறவினர்கள் தனியே விட்டுச்செல்லும் போக்கு அதிகரித்துள்ளது. முதியவர்களை சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைகளுக்கு அழைத்து வந்து அங்கேயே விட்டுச் செல்லும் சம்பவங்களும் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு தனித்து விடப்படும் முதியவர்கள் வாழ்வாதாரத்துக்காக யாசகம் எடுக்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டு மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். இதுபோன்ற முதியவர்களை பாதுகாக்க மாவட்டங்களில் முதியோர் மையங்களை அமைக்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இருப்பினும் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் முதியோர் பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்படவில்லை. இதனால் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கைவிடப்பட்ட முதியவர்கள் பாதுகாக்கப்படும் வகையில், தேசிய முதியோர் மையங்களை அமைக்க உத்தரவிட வேண்டும்" என்று மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனுவை நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், ஏ.டி.மரியகிளாட் அமர்வு விசாரித்தது. பின்னர் நீதிபதிகள், "சமீப காலமாக ஊரகப் பகுதிகளில் வயதானவர்களை குறி வைத்து கொள்ளை, கொலை போன்ற சம்பவங்கள் நடப்பது அதிகரித்து வருகிறது. முதியோருக்காக அமைக்கப்பட்டுள்ள ஒரு சில மையங்களிலும், படுக்கை, போர்வை, தண்ணீர், கழிவறை போன்ற அடிப்படை வசதிகள் சரியான முறையில் வழங்கப்படுவதில்லை. முதியவர்களை பாதுகாப்பது அரசின் கடமை," என்றனர்.

மத்திய அரசு தரப்பில், "தேசிய முதியோர் மையங்களை அமைப்பதற்கான நிதியை மத்திய அரசு வழங்கும். மையங்களை அமைத்து, பராமரிப்பது மாநில அரசின் பணியே," எனத் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து நீதிபதிகள், "நிதியை வழங்கினால் மட்டும் போதாது, அந்த நிதி சரியாக பயன்படுத்தப்படுகிறதா? என்பதை கண்காணிக்க வேண்டியதும் மத்திய அரசு பணி தானே?

சமூகத்தின் மூத்த குடிமக்களை பாதுகாக்கும் வண்ணம் அவர்களுக்கான அடிப்படை தேவைகளை நிறைவேற்றி அவர்களை பாதுகாப்பது அரசுகளின் கடமை. இதனால் இந்த வழக்கில் மத்திய சமூக நலத்துறையின் முதன்மைச் செயலர், தமிழக சமூக நலத்துறையின் முதன்மை செயலர் ஆகியோரை நீதிமன்றம் தாமாக முன்வந்து எதிர்மனுதாரராக சேர்க்கிறது.

தமிழகத்தில் தேசிய முதியோர் மையங்கள் அமைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் பதில் மனுத் தாக்கல் செய்ய வேண்டும். விசாரணை 2 வாரங்களுக்கு ஒத்திவைக்கப்படுகிறது" என உத்தரவிட்டனர்.

## 'நோ சொல்ல முடியாது; கொலை செய்ய முடியுமா?' மேகாலயா சம்பவத்தில் கங்கனா அதிர்ச்சி!

புதுடெல்லி: ஜூன்.11-

"ஒரு பெண் தனக்குப் பிடிக்காத திருமணத்துக்கு 'நோ' சொல்ல முடியாது, ஆனால், பிடிக்காத கணவரை கூலிப்படையை ஏவி கொலை செய்ய முடியும் என்பது எவ்வளவு பெரிய அபத்தம். இவரைப் போன்ற முட்டாள்களை நம்பக் கூடாது. புத்திசாலிகள் சுயநலத்துக்காக பிறரை கெடுப்பதுண்டு. ஆனால், இவரைப் போன்ற முட்டாள்களுக்கு தாம் என்ன செய்கிறோம் என்பதே தெரியாது. உங்களைச் சுற்றியிருக்கும் முட்டாள்தனங்கள் பற்றி எப்போதும் விழிப்புடன் இருங்கள்" என்று பாஜக எம்.பி.யும், நடிகையுமான கங்கனா ரனாவத் தெரிவித்துள்ளார்.

மேகாலயாவில் தேனிலவு சென்ற இடத்தில் புது மாப்பிள்ளையை கூலிப்படை வைத்து கொன்றதாக இளம்பெண் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பாக அவரது காதலன் உள்ளிட்ட மேலும் 7 பேரை போலீஸார் கைது செய்துள்ளனர். இந்தக் கொலை சம்பவம் பற்றியே கங்கனா ரனாவத் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர், தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், "ஒரு பெண் தனக்குப் பிடிக்காத திருமணத்துக்கு 'நோ' சொல்ல முடியாது. ஏனெனில் அவருக்கு அவரது பெற்றோர் மீது பயம். ஆனால், பிடிக்காத கணவரை கூலிப்படையை ஏவி கொலை செய்ய முடியும் என்பது எவ்வளவு பெரிய அபத்தம்.

காலை முதலே இது என் புத்திக்குள் ஓடிக் கொண்டிருக்கிறது. இதைக் கடந்து செல்ல முடியவில்லை. எனக்கு தலைவலியே வந்துவிட்டது. அந்தப் பெண்ணால் விவாகரத்து செய்திருக்கலாம் அல்லது காதலனுடன் சென்றிருக்கலாம். இது எத்தனை கொடூரமானது, எத்தனை அபத்தமானது, முட்டாள்தனமானது. இவரைப் போன்ற முட்டாள்களை நாம் எளிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

இவர்கள்தான் சமூகத்துக்கு பெரிய அச்சுறுத்தல். இவர்களைப் போன்றோரை பார்த்து நாம் கேலி செய்துவிட்டு, இவர்களால் என்ன ஆபத்து இருக்கப் போகிறது என்று குறைத்து மதிப்பிட்டு விடுகிறோம். புத்திசாலிகள் சுயநலத்துக்காக பிறரை கெடுப்பதுண்டு. ஆனால், இவரைப் போன்ற முட்டாள்களுக்கு தான் என்ன செய்கிறோம் என்பதே தெரியாது. உங்களைச் சுற்றியிருக்கும் முட்டாள்தனங்கள் பற்றி எப்போதும் விழிப்புடன் இருங்கள்" என்று பதிவிட்டுள்ளார்.



## சின்னவீராம்பட்டினம் கடற்கரையில் கடலரிப்பு இடிந்து விழுந்த கான்கிரீட் அடித்தளம்

புதுச்சேரி, ஜூன்.11-
புதுச்சேரி கடற்கரையில் கடலரிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், சின்னவீராம் பட்டினத்தில் டென்மார்க் நீலக்கொடி ஏற்பட்ட கான்கிரீட் அடித்தளம் இடிந்து விழுந்துள்ளது.

புதுவையில் 'ராக் பீச்' என அழைக்கப்படும் கடற்கரைச் சாலை சுற்றுலா பயணிகளை அதிகம் கவர்ந்த பகுதியாகும். இதேபோல் சுற்றுலா பயணிகளை கவர பாண்டி மெரினா, ஈடன் கடற்கரை என புதிய கடற்கரைகள் உருவாக்கப்பட்டுள்ளன. நமது நாட்டில் நீலக்கொடி சான்றிதழ் பெற்ற சில கடற்கரைகளில் ஒன்றாக புதுவை சின்னவீராம்பட்டினம் ஈடன் கடற்கரை உள்ளது.

புதுச்சேரிக்கு அருகிலுள்ள சின்னவீராம் பட்டினத்தில் உள்ள ஈடன் கடற்கரை, டென்மார்க்கை தளமாகக் கொண்ட சுற்றுச்சூழல் கல்வி அறக்கட்டளையிடம் இருந்து (FEE) 'நீலக் கொடி' சான்றிதழைப் பெற்ற யூனியன் பிரதேச அள வில் முதல் கடற்கரையாக கடந்த 2021ல் அறிவிக்கப்பட்டது.. இங்கு பேணப்படும் சுகாதாரம், சுற்றுலா பயணிகளுக்கான வசதிகளை ஆகியவற்றை பார்வையிட்டு, இந்த நீலக்கொடி அந்தஸ்து அப்போது வழங்கப்பட்டது.

இந்த கடற்கரையில் தற்போது ஏற்பட்டுள்ள கடல் அரிப்பின் காரணமாக, இந்த நீலக்கொடி ஏற்றப்பட்ட கான்கிரீட் அடித்தளம் இடிந்து விழுந்துள்ளது. இதனால் நீலக்கொடி அகற்றப்பட்டுள்ளது.

இதுகுறித்து தேசிய கடலோர ஆராய்ச்சி மைய முன்னாள் இயக்குநர் ரமணமூர்த்தி கூறுகையில், "பருவகால மாற்றங்களால் ஈடன் கடற்கரையில் கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது. பருவகால மாற்றங்களின்போது கடல் அரிப்பை தடுப்பது குறித்து அரசுக்கு பரிந்துரைகள் சமர்பிக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

இது குறித்து சுற்றுலா மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன் கூறுகையில், "ஈடன் கடற்கரையில் கடலரிப்பு குறித்து அரசு ஆய்வு நடத்தியுள்ளது. அரிப்பைத் தடுக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடலோர ஒழுங்கு முறை விதிகளை புரிந்து அதற்கேற்ப நடவடிக்கை எடுப்போம். கடலோர அரிப்பு ஏற்பட்டுள்ள கிராமங் களிலும் தடுப்பு நடவடி க்கைகள் மேற்கொள் ளப்படும்" என தெரிவித்தார்.

## 'கிரேட்டா தன்பர்க் கோப மேலாண்மை வகுப்புக்குச் செல்ல வேண்டும்' ட்ரம்ப் அறிவுரை



நியூயார்க், ஜூன்.11-
இஸ்ரேல் ராணுவத்தால் கடத்தப்பட்டதாக கிரேட்டா தன்பர்க் குற்றஞ்சாட்டிய நிலையில், 'தன்பர்க் கோப மேலாண்மை வகுப்புகளுக்கு செல்ல வேண்டும்' என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அறிவுரை வழங்கியுள்ளார்.

காசாவை நோக்கி நிவாரண கப்பலில் சென்ற தனது குழுவினருடன் கடத்தப்பட்டதாக சமூக செயற்பாட்டாளர் கிரேட்டா தன்பெர்க் நேற்று சமூக ஊடகங்களில் ஒரு வீடியோவை வெளியிட்டார். இதனை இஸ்ரேல் உடனடியாக மறுத்தது.

நேற்று (திங்கள்கிழமை) அதிகாலை காசாவை நோக்கிச் சென்றபோது, மேட்லீன் நிவாரணக் கப்பலை இஸ்ரேலியப் படைகள் இடைமறித்தன. அது தொடர்பாக வீடியோ ஒன்றில் பேசிய கிரேட்டா தன்பர்க், "இந்த வீடியோவை நீங்கள் பார்த்தால், நாங்கள் சர்வதேச நீரில் தடுத்து நிறுத்தப்பட்டு கடத்தப்பட்டுள்ளோம். என்னையும் மற்றவர்களையும் விரைவில் விடுவிக்க அழுத்தம் கொடுக்க வேண்டும்" என்று கூறியிருந்தார்.

இருப்பினும், சில மணிநேரங்களுக்குப் பிறகு, இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சகம் எக்ஸ் சமூக வலைதளத்தில் கிரேட்டா தன்பர்க்கின் புகைப்படத்தைப் பகிர்ந்து, "கிரேட்டா தன்பர்க் தற்போது இஸ்ரேல் வழியாக பாதுகாப்பாக சென்று கொண்டிருக்கிறார்" என்று கூறியது. மேட்லீன் கப்பலில் குழந்தைகளுக்கான பால்பவுடர், மாவு, அரிசி, டயப்பர்கள், பெண்கள் சுகாதாரப் பொருட்கள் மற்றும் பல வகையான பொருட்கள் எடுத்துச்செல்லப்பட்டன.

இந்த நிலையில் தன்பெர்க் கடத்தப்பட்டதாகக் கூறப்படுவது குறித்த செய்தியாளரின் கேள்விக்கு பதிலளித்த ட்ரம்ப், "அவர் ஒரு விசித்திரமான நபர். அவர் ஒரு இளம், கோபக்காரர். அது உண்மையான கோபமா என்று எனக்குத் தெரியவில்லை; நம்புவது கடினம். அவர் நிச்சயமாக வித்தியாசமானவர். அவர் கோப மேலாண்மை வகுப்பிற்குச் செல்ல வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அதுதான் அவருக்கு எனது முதன்மை பரிந்துரை. கிரேட்டா தன்பர்க்கை கடத்தாமலேயே இஸ்ரேல் போதுமான சிக்கல்களைக் எதிர்கொண்டுள்ளது என்று நான் நினைக்கிறேன்." என்று கூறினார்

## இந்திய விமானப் படைக்காக ரூ.10,000 கோடியில் 3 உளவு விமானங்கள்

புதுடெல்லி, ஜூன்.11-
இந்திய விமானப் படைக்காக ரூ.10,000 கோடியில் 3 உளவு விமானங்களை கொள்முதல் செய்ய முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. கடந்த ஏப்ரல் 7 முதல் 10ம் தேதி வரை இந்தியா, பாகிஸ்தான் இடையே அதிதீவிர போர் நடைபெற்றது. இந்த போரில் இந்திய விமானப் படையின் ட்ரோன்கள், உளவு விமானங்கள் மிக முக்கிய பங்கு வகித்தன.

தற்போது இந்திய விமான படையில் பாம் பார்டியர் குளோபல் 5000, போயிங் 707337சி, கல்ப்ஸ்டீரிம் ஜி100 ஆகிய உளவு விமானங்கள் பயன்பாட்டில் உள்ளன. மேலும் இஸ்ரேல் தயாரிப்பான ஹெரோன் ட்ரோன்கள் மற்றும் இந்திய விமானப் படையில் இருந்து விடுவிக்கப்பட்ட மிக் 25 ரக போர் விமானங்களும் உளவு விமானங்களாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை தவிர பல்வேறு ட்ரோன்கள், ஹெலிகாப்டர்களும் எதிரி நாடுகளை வேவு பார்க்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளன.

இந்த சூழலில் இந்திய விமானப் படைக்காக ரூ.10,000 கோடியில் 3 அதிவீன உளவு விமானங்களை வாங்க முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. அமெரிக்காவின் போயிங் நிறுவனம் மற்றும் கனடாவின் பாம்பார்டியர் நிறுவனத்திடம் இருந்து உளவு விமானங்கள் வாங்கப்படும் என்று தெரிகிறது.

புதிதாக வாங்கப்படும் 3 உளவு விமானங்களில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அதிநவீன ரேடார்கள், கண்காணிப்பு கருவிகள் பொருத்தப்பட உள்ளன. அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளிடம் மட்டுமே அதிநவீன உளவு விமானங்கள் உள்ளன. இந்த பட்டியலில் விரைவில் இந்தியாவும் இணைய உள்ளது.

இதுகுறித்து பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் கூறுகையில், "தரை, வான், கடல் பகுதிகளை கண்காணிக்கும் வகையில் 3 உளவு விமானங்களை வாங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இவை மிக நீண்ட தொலைவு பறக்கும் திறன் கொண்டவையாக இருக்கும். இரவு, பகல் மற்றும் மோசமான வானிலையிலும் இந்த உளவு விமானங்களை இயக்க முடியும். இத்திட்டத்துக்கு ஐஸ்டார் என்று பெயரிடப்பட்டு உள்ளது" என்று தெரிவித்தன.

## தீ விபத்தில் சிக்கிய சிங்கப்பூர் கப்பல்: 18 பணியாளர்களை பத்திரமாக மீட்ட இந்திய கடற்படை



மங்களூரு, ஜூன்.11-
கொழும்பில் இருந்து மும்பைக்கு வந்து கொண்டிருந்த சிங்கப்பூர் கப்பலில் திடீரென தீ விபத்து ஏற்பட்ட நிலையில், அதில் இருந்த 22 பணியாளர்களில் 18 பேரை இந்திய கடற்படை மீட்டுள்ளது.

சிங்கப்பூர் கொடியுடன் கூடிய கொள்கலன் கப்பலான எம்வி வான் ஹை 503, கொழும்பில் இருந்து புறப்பட்டு மும்பைக்குச் சென்று கொண்டிருந்தது. இந்த கப்பல் நேற்று (ஜூன் 9) கேரளாவின் பேப்பூர் கடற்கரையில் இருந்து சுமார் 78 கடல் மைல் தொலைவில் இருந்தபோது திடீரென தீ பிடித்துள்ளது.

இது குறித்த தகவல் இந்திய கடற்படைக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்து, ஐஎன்எஸ் சூரத் கப்பல் சம்பவ இடத்துக்கு விரைந்தது. கப்பலில் இருந்த 22 பணியாளர்களில் 4 பேர் கடலில் காணாமல் போன நிலையில், மீதமுள்ள 18 பேரை மீட்டு நேற்று இரவு 10.45 மணிக்கு நியூ மங்களூர் துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்த சம்பவம் குறித்த விவரங்களை அளித்துள்ள மங்களூரு காவல் ஆணையரகம், "ஐஎன்எஸ் சூரத்தில் இருந்த பணியாளர்களில் ஆறு பேர் காயமடைந்தனர். அவர்களில், இருவர் படுகாயங்களுடனும் 4 பேர் லேசான காயங்களுடன் இருந்தனர். படுகாயமடைந்தவர்களின் பெயர்கள் லு யான்லி மற்றும் சோனிதுர் ஹேனி.

லேசான காயமடைந்தவர்களின் பெயர்கள் சூ ஃபபாவோ, குவோ லினினோ, தெய்ன் தான் ஹ்டே மற்றும் கீ சாவ் ஹ்டு.

காயமடைந்த அனைவரும் சிகிச்சைக்காக ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். மற்ற பணியாளர்கள் ஒரு ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டனர். அவர்களின் பெயர்கள் வெய் சுன்ஜு, டேக் பெங், கான் ஹியூ வால், லின் சுன் செங், ஃபெங் லி, லி ஃபெங்குவாங், தெட் ஹுட் ஸ்வே, குவோ எர்ச்சுன், ஹோலிக் அஸ்யாரி, சு வெய், சாங் ரென்ஹான் மற்றும் வு வென்சி.

கடலில் காணாமல் போனவர்கள் யூ போ ஃபாங், சான் வின், ஜெய்னல் அபிடின் மற்றும் ஹ்சி சியாவென்.

மீட்கப்பட்டவர்களில், எட்டு பேர் சீனர்கள், நான்கு பேர் தைவான் நாட்டினர், நான்கு பேர் மியான்மரைச் சேர்ந்தவர்கள் மற்றும் இரண்டு பேர் இந்தோனேசியாவைச் சேர்ந்தவர்கள்.

காயமடைந்தவர்களுக்கு சரியான நேரத்தில் மருத்துவ உதவி கிடைப்பதை உறுதி செய்வதற்காக துறைமுகம் மற்றும் காவல்துறையால் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டன." என தெரிவிக்கப்பட்டுள்ளது.



### காட்பாடி ரயில் நிலையத்தில் தேசியக்கொடியை சரி செய்ய தேசபக்தர்கள் கோரிக்கை

வேலூர், ஜூன்.11-
வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காட்பாடி ரயில்வே சந்திப்பு ரயில் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரம்மாண்டமான தேசிய கொடியின் கடைசி பகுதி அறந்துள்ளது காணப்படுகிறது. இதனை உடனடியாக சரி செய்து பறக்க விட தேசபக்தர்கள் கோரிக்கை... இதை கண்காணிக்காத மத்திய அரசு உயர் பதவி ஊழியர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர்.






### போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனையில் காணொளி வாயிலாக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நூலகத்தினை திறந்து வைத்தார்

தேனி, ஜூன்.11-
தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் உள்ள அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவர் டாக்டர் .ரவீந்திரநாத் குமார் குத்து விளக்கை ஏற்றி வைத்தார். இதில் நூலகர் கவிதா இரண்டாம் நிலை நூலகர் அய்யனார், திருநாவுக்கரசு, மணிகண்டன் உள்ளிட்ட நூலக அலுவலர்கள் உடன் இருந்தனர் உடன் மருத்துவ செவிலியர்களும் மருத்துவர்களும் ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டம் சீமானூத்து பகுதியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி , முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணிகளை தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் மா. சௌ.சங்கீதா,இ.ஆ.ப., , தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ் செல்வன் , வருவாய் கோட்டாட்சியர் சண்முக வடிவேல் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் கலந்து கொண்டனர்.

## குமுளி அருகே ஒரே குழியில் விழுந்து கிடந்த நாய், புலி மீட்பு



குமுளி, ஜூன்.11-
குமுளி அருகே ஏலக்காய் தோட்டத்தில் உள்ள 15 அடி குழியில் விழுந்து கிடந்த நாய் மற்றும் புலியை வனத்துறையினர் மீட்டனர்.

தமிழக கேரள எல்லையான குமுளி அருகே செல்லாறு கோவில்மெட்டு பகுதி உள்ளது. இங்குள்ள சன்னி என்பவரது ஏலக்காய் தோட்டத்தில் 15 அடி குழி ஒன்று இருந்தது. இதில் நேற்று நாய் ஒன்றின் குரைப்பு சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது. அருகில் இருந்தவர்கள் உள்ளே எட்டிப் பார்த்தனர். அங்கு புலியும், அதற்கு அருகில் நாய் ஒன்றும் இருந்தது தெரிய வந்தது.

இதனைத் தொடர்ந்து வனத்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இடுக்கி மாவட்ட வன அலுவலர் வினோத்குமார் தலைமையிலான வனத்துறையினர் சம்பவ இடத்துக்கு வந்தனர். பெரியாறு புலிகள் காப்பக மருத்துவர் அனுராஜ் மயக்க ஊசி செலுத்தி புலியை மீட்டார். பின்பு கூண்டில் அடைக்கப்பட்ட புலி கவி எனும் அடர் வனப்பகுதியில் விடப்பட்டது. இதேபோல் நாயையும் மீட்டு அதன் காயங்களுக்கு சிகிச்சை அளித்தனர்.

வனத்துறையினர் கூறுகையில், புலிக்கு 3 வயது ஆகும். நாயை விரட்டி வந்தபோது இந்த குழியில் நாயும், புலியும் விழுந்திருக்கலாம். இந்த அதிர்ச்சியில் புலி நாயை தாக்கவில்லை. நாய் தொடர்ந்து குரைத்ததால் அருகில் உள்ளவர்கள் இதைப் பார்த்து தகவல் தெரிவித்தனர், என்றனர்.

## கூட்டத்தை சமாளிக்க புதிய படை அவசியம்




மும்பை, ஜூன்.11-
மும்பையில் திவா மற்றும் மும்ப்ரா ரயில் நிலையங்களுக்கிடையே நடந்த விபத்தில் 4 ரயில் பயணிகள் உயிரிழந்துள்ளதுடன், 6 பேர் சிகிச்சையில் உள்ளனர் என்ற செய்தி ரயில் பயணிகள் மட்டு மின்றி இதர பொதுமக்களிடமும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எதிரெதிரே சென்ற இரண்டு ரயில்களிலும் கட்டுக்கடங்காத பயணிகள் கூட்டம் இருந்துள்ளது. அவர்கள் முதுகில் மாட்டியிருந்த பை ஒன்றுக்கொன்று உரசியதில் பயணிகள் கீழே விழுந்து இந்த அசம்பாவித சம்பவம் நடந்துள்ளது. மும்பையில் பொதுவா கவே ரயில் பயணிகளின் எண்ணிக்கை மற்ற நகரங்களை விட அதிகம். அலுவலகம் சென்று வருவோருக்கு புறநகர் ரயில்களே பிரதான பொதுப் போக்குவரத்தாக இருந்து வருகிறது. நாள் ஒன்றுக்கு 61 லட்சம் ரயில் பயணிகள் பயணம் செய்கிறார்கள் என்றால் ரயில்களிலும் ரயில் நிலையங்களிலும் தினந்தோறும் ஏற்படும் நெருக்கடியை எளிதில் உணர முடியும். இந்தியாவில் இயங்கும் புறநகர் ரயில்களில் 1,000 பேர் உட்கார்ந்து செல்ல முடியும்; 6,000 பேர் வரை நின்று பயணிக்க முடியும். ஆனால், மும்பை ரயில்களில் இந்த எண்ணிக்கையைத் தாண்டி பயணிகள் நெருக்கியடித்துக் கொண்டு, தொங்கியபடி பயணித்து வருகின்றனர். இந்த அளவுக்கு ரயிலில் பயணிகள் பயணம் செய்ய அனுமதிப்பதே தவறான நடைமுறை.

நடந்துள்ள சம்பவத்தையடுத்து, தற்போது இயங்கும் புறநகர் ரயில்கள் மற்றும் புதிதாக தயாரிக்கப்படும் ரயில்களில் தானியங்கி கதவுகள் பொருத்தப்பட்டு, மூடிய நிலையில் ரயில்கள் இயக்கப்படும் என்று ரயில்வே அதிகாரிகள் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. அதேநேரம், கதவுகளை திறக்க விடாதபடி, மூட முடியாதபடி பயணிகள் முண்டியடிக்கும் நிலையை எப்படி சமாளிப்பது? அத்தகைய சூழ்நிலையை திறமையான கூட்ட நெரிசலை சமாளிக்கும் உத்திகளைக் கொண்டே நிர்வகிக்க வேண்டும்.

இந்தியாவின் மக்கள் தொகை 140 கோடியை கடந்துவிட்ட நிலையில், கூட்ட நெரிசலால் ஏற்படும் உயிரிழப்புகள் ஆங்காங்கே அடிக்கடி நடக்க ஆரம்பித்துவிட்டன. ஆனால், பொது இடங்களில் கூட்டத்தை சமாளிக்கும் நடைமுறை என்றால் என்னவென்றே தெரியாத நிலையில் தான் பல துறைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

பொதுமக்கள் கூடும் இடங்கள் அனைத்திலும் கூட்டத்தை நிர்வகிக்க தனி நடைமுறைகளை உருவாக்க வேண்டும். அடிப்படைக் கட்டமைப்புகள் அனைத்தையும் விலாசமான இட வசதிகளுடன் அமைக்க வேண்டும், காலி நிலப்பரப்பைக் கொண்ட சதுக்கங்கள், பூங்காக்கள் உருவாக்குதல் உள்ளிட்ட மக்கள் தொகை எண்ணிக் கையை மனதில் கொண்டு அடிப் படை கட்டுமானங்களை மேற்கொள்ள வேண்டும். ம்பை ரயில் விபத்து சம்பவத்தைப் பொறுத்தமட்டில், பயணிகளின் தேவைக்கேற்ப ரயில்கள் இயங்கவில்லை என்பதே கூட்ட நெரிசலுக்கான அடிப்படையாகும். போதுமான அளவில் ரயில்களை இயக்குவது மட்டுமின்றி, மக்கள் தொகை வளர்ச்சியின் வேகத்திற்கு இணையாக பொதுப் போக்குவரத்துவதற்கும், சாலை வசதிகள் மற்றும் அடிப்படை கட்டமைப்புகளை உருவாக் குவதற்கும் மத்திய, மாநில அரசுகள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

பொது இடங்களில் மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்த, முறையாக நிர்வகிக்க, அதிவேகத்தில் இயங்கும் தனிப்படை அவசியம் என்பதையே நடந்துவரும் சம்பவங்கள் உணர்த்துகின்றன.



# சுற்றுலா பயணிகள் வருகை குறைந்தது: பஹல்காம் குதிரை உரிமையாளர்களுக்கு தினமும் ரூ.2 கோடி இழப்பு

பஹல்காம், ஜூன்.11-

பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு சுற்றுலா பயணிகள் வருகை குறைந்ததால் குதிரை உரிமையாளர்களுக்கு தினமும் ரூ.2 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் முக்கிய சுற்றுலாத் தலமாக விளங்கும் பஹல்காம் பகுதிக்கு வாகனங்களில் செல்ல முடியாது. எனவே அப்பகுதி வாசிகள் குதிரைகள் மூலம் பயணிகளை அழைத்துச் செல்கின்றனர். இதன்மூலம் கிடைக்கும் வருமானம்தான் அவர்களின் ஒரே வாழ்வாதாரமாக உள்ளது. சுமார் 6 ஆயிரம் குதிரைகள் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பஹல்காமிலிருந்து பைசரன் பள்ளத்தாக்கு பகுதிக்கு ஒரு நபரை குதிரையில் அழைத்துச் செல்ல ரூ.1,300 வசூலிக்கின்றனர். அதேநேரம், பஹல்காம், பைசரன் பள்ளத்தாக்கு, காஷ்மீர் பள்ளத்தாக்கு, டபியாயின் ஆகிய 4 பகுதிகளுக்கும் சேர்த்து அழைத்துச் செல்ல ரூ.2,400 வசூலிக்கின்றனர். சில நேரங்களில் இந்த கட்டணம் ரூ.3 ஆயிரம் வரை அதிகரிப்பது உண்டு.

கோடைகாலத்தில் தினமும் லட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் காஷ்மீர் செல்வது உண்டு. இந்நிலையில், பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22ம் தேதி தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டதில் 26 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர். இதையடுத்து, சுற்றுலாப் பயணிகள் வருகை குறைந்துள்ளது. மொத்தம் சுமார் 6 ஆயிரம் குதிரைகள் உள்ள நிலையில் வெறும் 100 குதிரைகள் மட்டுமே சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்ல பயன்படுத்தும் நிலை உள்ளது.

ஒரு குதிரையின் விலை சுமார் ரூ.1 லட்சமாக உள்ளது. ஒரு குதிரைக்கு உணவு வழங்க தினமும் குறைந்தபட்சம் ரூ.400 செலவிட வேண்டி உள்ளது. இதன் காரணமாக குதிரையை வைத்து பிழைப்பு நடத்துபவர்களுக்கு தினமும் ரூ.2 கோடி வரை இழப்பு ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. இதனால் அவர்களின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாகி உள்ளதாகக் கூறப்படுகிறது.



# சாணார்பட்டி அருகே சலங்கை எருது விடும் விழா


கோபால்பட்டி, ஜூன்.11-

சாணார்பட்டி அருகே நடைபெற்ற சலங்கை எருது விடும் விழாவில் ஏராளமானவர் கலந்து கொண்டனர். சாணார்பட்டி அருகே உள்ள மருநூத்து ஊராட்சி கோட்டைப்பட்டியில் பெய்யில்தாத்தன் சாமி கும்பிடு திருவிழா கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்றது.

முன்னதாக கிராம தெய்வங்களுக்கு பழம் வைத்தலுடன் விழா தொடங்கியது. தொடர்ந்து தேவராட்டம், சேர்வை ஆட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், கும்மி கோலாட்டத்துடன் கோயில் வீட்டிலிருந்து விழாக்கூடை எடுத்து கோயில் சென்றடைதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நேற்று மாலை விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சலங்கை எருது ஓட்டம் நடைபெற்றது. இதில் திண்டுக்கல், கரூர், திருச்சி, மணப்பாறை, குஜிலியம்பாறை, தேனி, கம்பம் ஆகிய பகுதிகளிலிருந்து 100க்கும் மேற்பட்ட மாடுகள் பங்கேற்றன. இதில் பங்கேற்ற இளைஞர்கள் சட்டை அணியாமல் பாரம்பரிய முறைப்படி கையில் குச்சியுடன் தலைப்பாகை அணிந்திருந்தனர். பின்னர் இளைஞர்களின் ஆரவாரத்துடன், உறுமி மேளம் முழங்க சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் எருது ஓட்டம் நடைபெற்றது. மாடுகளை கையில் குச்சியுடன் விரட்டியபடி, புழுதி பறக்க இளைஞர்கள் ஓடி வந்தனர்.

இதில் வெற்றிபெற்ற மாட்டுக்கு தங்க காசு, 2வது இடம் பிடித்த மாட்டிற்கு வெள்ளிக்காசு அதனைத் தொடர்ந்து வரிசையாக வந்த மாடுகளுக்கு மஞ்சள், குங்குமம், கரும்புகள் வழங்கி மரியாதை செய்யப்பட்டன. இந்த சலங்கை எருது ஓட்டத்தினை காண கோட்டைபட்டி, மருநூத்து, ஜோத்தாம்பட்டி, மணியக்காரன்பட்டி மற்றும் சுற்றுவட்டார கிராம மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.




# மதுரை அனுப்பானடி வேளாளப்பொதுமக்கள் நடத்தும் 75 ஆம் ஆண்டு திருப்பரங்குன்றம் பாலாபிஷேக விழா

மதுரை, ஜூன்.11-

மதுரை மாநகராட்சி 88 வார்டு அனுப்பானடி வேளாளப் பொதுமக்கள் நடத்தும் 75 ஆம் ஆண்டு திருப்பரங்குன்றம் ஸ்ரீ ஆறுமுக பெருமான் பாலாபிஷேக நல்விழா தலைவர் தூசி கருப்பன், செயலாளர் பாயிண்ட் கார்த்திக், பொருளாளர் சோம சுந்தரம், துணைச் செயலாளர் ஜெயகுமார் ஆகியோர் தலைமையிலும், பால்குடம் நிர்வாகிகள் சிவஞானம் என்ற பாபு, துலாம் சரவணன், பத்மா சித்தையா, பென்னர் சந்திரன், சேது ராமசாமி, முத்து ராஜா, கூடாயி மீனாட்சி சுந்தரம், செந்தில் கணேஷ், மிலிட்டரி சரவணன், பூசாரி செல்வம், மணிகண்டன், சி.கி.றி பாண்டி, வில்லாபுரம் நாகராஜ், புதூர் அரசு சுப்பிரமணி, சிலைமான் கணேஷன், மாரிமுத்து, ஆறுமுகம், பானு முரளி, மீனாட்சி பரமசிவம், கருவப்பிள்ளை சரவணன், கருவப்பிள்ளை முருகேசன், மேலமாசி வீதி தங்கராஜ், இரட்ட குளம் ஜவஹர்லால் ஆகியோர் முன்னிலையில் நடைப்பெற்றது, இந்நிகழ்ச்சியில் அனுப்பானடி வாழ் பொதுமக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பால்குடம் எடுத்து பாதயாத்திரையாக சென்று திருப்பரங்குன்றம் முருகப்பெருமானுக்கு தங்கள் நேர்த்திக்கடனை செலுத்தினார்கள், இந்நிகழ்வில் ராஜேஷ் கண்ணன், காய்கறி கடை ராஜா, றி.கூஷி.சி.ஸ்டோர் சங்கர், மக்காடு பாலாஜி, சபரி, முத்து கிங்கிலிநாதன் மற்றும் அனுப்பானடி ஊர் பொதுமக்கள், பால்குட நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர், இப்பால் குடத்துக்கு நன்கொடை வழங்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் பால்குடம் நிர்வாகிகள் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்,

# சுதந்திரப் போராட்ட வீரர் "வாளுக்கு வேலி அம்பலம்" அவர்களின் பிறந்த நாள் அரசு விழாவில், அன்னாரது திருவுருவச்சிலைக்கு அரசின் சார்பில் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினர்

காளையார் கோவில், ஜூன்.11-

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நகரம்பட்டி கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைந்துள்ள சுதந்திரப் போராட்ட வீரர் "வாளுக்கு வேலி அம்பலம்" அவர்களின் திருவுருவச்சிலைக்கு, மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில், அரசின் சார்பில் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி தெரிவிக்கையில்,



நாம் இன்றையதினம் சுதந்திர காற்றை சுவாசிப்பதற்கு காரணமாக உள்ள சுதந்திரப் போராட்டத் தியாகிகளை போற்றிடும் வகையிலும், அவர்களை கௌரவிக்கும் பொருட்டும், தமிழ்நாடு முதலமைச்சர் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதனடிப்படையில், 200 ஆண்டுகளுக்கு முன்னதாக, நடந்துள்ள உண்மைச் சம்பவத்தை வெளிக்கொணருகின்ற வகையில், சுதந்திரப் போராட்டத்தில் தனது பங்களிப்பையும், தியாகத்தையும் முழுமையாக அளித்த சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் புகழை உலகிற்கு பறைசாற்றுகின்ற வகையிலும், அதற்கு மெருக்கூட்டும் பொருட்டும், முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்கள், தன் பொன்மொழிகளால் வரலாற்று சிறப்புக்களை நூல்களாக பொறித்துள்ளார்கள்.

அன்றைக்கு முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களால் விதைத்த விதையின் பயனாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் புகழிற்கு வலுச்சேர்க்கின்ற வகையில், அன்னாரது பிறந்த நாளினை அரசு விழாவாக கொண்டாடிட உத்தரவிட்டார்கள்.

அதன்படி, மூன்றாம் ஆண்டு அரசு விழா இன்றையதினம் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதற்கான பெரும் முயற்சியில், நான் ஈடுபட்டதற்கான முழுப்பயனையும் அடைந்தமைக்கு, மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இதற்கான சிறப்பான நடவடிக்கையை மேற்கொண்ட தமிழ்நாடு முதல்வருக்கு செய்தித்துறை அமைச்சர் , சிவகங்கை மாவட்ட மக்களின் சார்பிலும், எனது சார்பிலும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அறிவிப்பின்படி, சுதந்திரப் போராட்ட வீரர் "வாளுக்கு வேலி அம்பலம்" அவர்களுக்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை நகரம்பட்டியில் அமைக்கப்பட்டு, கடந்த 22.01.2025 அன்று சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் தமிழ்நாடு முதலமைச்சரின் திருக்கரங்களால் காணொலி வாயிலாக, திறந்து வைக்கப்பட்டது சிறப்பிற்குரிய ஒன்றாகும். ஒவ்வொரு ஆண்டும் இதேபோன்று அன்னார் அவர்களின் பிறந்த நாள் அரசு விழா, இன்னும் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது. சிலை அமைத்தது மட்டுமன்றி, இன்னும் தேவை யான கூடுதல் வசதிகளும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

வரலாற்று சிறப்புமிக்க நமது சிவகங்கை மாவட்டத்தில் சுதந்திர போராட்ட வீரர்களான வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் நினைவு மண்டபம் மற்றும் மருது சகோதரர்கள் அவர்களின் நினைவு மண்டபம், வீரத்தாய் குயிலி திருவுருவச்சிலை அதனை தொடர்ந்து, வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுருவ ச்சிலை ஆகியவைகள் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைந்துள்ளது பெருமைக்குரிய ஒன்றாகும்.

மொழி, இனம், சுதந்திரம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து, அதற்கென பாடுபட்டவர்களை கௌரவிக்கின்ற வகையிலும், அவர்களின் புகழை போற்றுகின்ற வகையிலும், அவர்களுக்கு நினைவகங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் திருவுருவச்சிலைகள் ஆகியவைகளை அமைத்து, எதிர்கால சந்ததியினர்கள் அறிந்து கொள்கின்ற வகையில், சிறப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மேற்கொண்டு, தலைசிறந்த முதலமைச்சராக தமிழ்நாடு முதலமைச்சர் திகழ்ந்து வருகிறார்கள் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், சிவகங்கை வட்டாட்சியர் சிவராமன், வழக்கறிஞர் சிவ.கலைமணி அம்பலம், வாரிசுதாரர்கள் கே.செல்வராஜ், கண்ணதாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# பி.கே.வென்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் வெப் டெவலப்மெண்ட் அண்ட் டிஜிட்டல் மார்க்கெட்டிங், காட்பாடி கிளை அலுவலக திறப்பு விழா

வேலூர், ஜூன்.11-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, தாராபடவேடு, வேலூர் மாநகராட்சி மண்டலம் ஒன் அருகே, பி.கே.வென்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் வெப் டெவலப்மென்ட் அண்ட் டிஜிட்டல் மார்க்கெட்டிங், சாப்ட்வேர் டெவலப்மெண்ட், ஐ.டி. கோர்ஸஸ், இன்டர்சீப், ஃபைனல் இயர் ப்ராஜெக்ட் மற்றும் மற்றும் ஈவென்ஸ் ப்ரோக்ராம் ஆகியவைகளை உள்ளடக்கிய கட்டமைப்பு அலுவலக திறப்பு விழா, பி.கே. வென்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத் தலைவர் பார்த்திபன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக அம்பாளால் குழுமம் நிறுவனத் தலைவர் ஜவுரிலால் ஜெயின் கலந்துகொண்டு ரிப்பன் வெட்டி குத்துவிளக்கேற்றி திறப்பு விழாவை சிறப்பித்தனர். சிறப்பு விருந்தினர்களாக ரோட்டரி ஜே.கே.என். பழனி, டிஸ்ட்ரிக்ட் கவர்னர் சுரேஷ், டிஸ்ட்ரிக்ட் கவர்னர் சிவகுமார், டிஸ்ட்ரிக்ட் சேர்மன் பெப்சி. சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டு திறப்பு விழாவை குத்துவிளக்கேற்றி சிறப்பித்தனர். இதில் குடியாத்தம் ரோட்டரி கிளப் முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள், உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு திறப்பு விழாவை சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் பி.கே.வென்ச்சர் நிறுவன அலுவலர்கள் ஹெச்.ஆர். விக்னேஷ், டிஜிட்டல் மார்க்கெட்டிங் டீம் லீடர் அஜித்குமார், கிராபிக் டிசைனர் காவியா, சாப்ட்வேர் டெவலப்மென்ட் ஹரி, தந்தி உலகம் நியூஸ் யுவராஜ், விஷ்ணு, டிஜிட்டல் டிசைனர் கிஷோர் மற்றும் பலர் கலந்து கொண்டு அலுவலக திறப்பு விழாவை விமெர்சியாக சிறப்பித்தனர். இறுதியில் நிறுவன ஹெச் ஆர் விக்னேஷ் நன்றியுரையாற்றி விழா நிறைவுபெற்றது. இதனைத் தொடர்ந்து உயர்தர அறுசுவை சைவ விருந்து அளிக்கப்பட்டது.



■ மதுரை மாநகராட்சி அருள்மிகு கூடலழகர் பெருமாள் திருக்கோவில் திருத்தேரினை வடம் பிடித்து தேரோட்டத்தை மேயர் இந்திராணி பொன்வசந்த் தொடங்கி வைத்தார்கள் அருகில் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன் , மண்டலத் தலைவர் .பாண்டிச்செல்வி , மாமன்ற உறுப்பினர்கள் நூர்ஜஹான் , .பாஸ்கரன் மற்றும் கோவில் அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



# தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்க சார்பில் ராணி மங்கம்மாள் 376 வதுபிறந்த நாள் முன்னிட்டு நலத்திட்ட விழா

மதுரை, ஜூன்.11-

மதுரையை ஆண்ட வீரமங்கை ராணி மங்கம்மாள் 376 வது பிறந்த நாளை முன்னிட்டு ராணி மங்கம்மாள் அரண்மனையில் அவரது திருவுருவப் படத்திற்கு தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்க மாநில பொருளாளர் சீனிவாசன் நாயுடு, மாவட்ட செயலாளர் ஜெகநாதன், முன்னாள் சிறைத்துறை கண்காணிப்பாளர் ராஜேந்திரன், விருதுநகர் மாவட்ட துணை தலைவர் வைரம், மாவட்ட இளைஞர் அணி தலைவர் ராம்குமார், பொருளாளர் அழகர்சாமி ,சுந்தர், ராம்குமார் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி ஏழை எளியோருக்கு புத்தாடைகள் வழங்கும் நலத்திட்ட விழா நடைபெற்றது. இவ்விழாவில் அனைத்து மாவட்ட நாயுடு நாயக்கர் அமைப்பின் முக்கிய பிரமுகர்கள் மற்றும் நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மதுரை முருக பக்தர்கள் மாநாட்டில் 'அறுபடை வீடு' மாதிரி அமைக்கலாம்; பூஜைகள் கூடாது ஐகோர்ட் உத்தரவு

**மதுரை, ஜூன்.11–**

மதுரையில் முருக பக்தர்கள் மாநாடு நடைபெறும் இடத்தில் அறுபடை வீடுகளின் மாதிரி அமைக்கலாம்; ஆனால் பூஜைகள் செய்யக் கூடாது என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக இந்து முன்னணி மாநில செயலாளர் முத்துக்குமார், உயர் நீதிமன்றம் மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், "இந்து முன்னணி சார்பில் மதுரை சுற்றுச்சாலை அம்மா திடலில் ஜூன் 22ல் பக்தியை வளர்க்க முருக பக்தர்களின் ஆன்மிக மாநாடு நடைபெற இருக்கிறது. இந்த மாநாட்டு வளாகத்தில் முருகனின் அறுபடை வீடுகளின் தற்காலிக மாதிரி கோயில்கள் அமைக்கப்படுகிறது. இந்த தற்காலிக அறுபடை வீடுகளில் ஜூன் 10 முதல் 22ம் தேதி வரை காலை 10 மணி முதல் 12 மணி வரையும், மாலையில் 5 மணி முதல் 7 மணி வரையும் பூஜைகள் நடத்தி பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அறுபடை வீடுகளின் மாதிரி கோயில் அமைக்க போலீஸார் அனுமதி மறுத்து உத்தரவிட்டு ள்ளனர். அதை ரத்து செய்து அறுபடை வீடுகளின் மாதிரி கோயில் அமைக்கவும், பூஜைகள் நடத்தவும் அனுமதி வழங்க உத்தரவிட வேண்டும்," என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதி பி.புகழேந்தி இன்று (ஜூன் 9) விசாரித்தார். அப்போது நீதிபதி, "முருகனின் அறுபடை வீடுகளின் மாதிரிகள் அமைக்கப்பட்டு வழிபட ஆகம விதிகள் அனுமதிக்கிறதா?" என கேள்வி எழுப்பினார். அதற்கு மனுதாரர் தரப்பில், "ஆகம விதிகளின் படியே அறுபடை வீடுகளின் மாதிரிகளை அமைத்து வழிபாடு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. காலை, மாலையில் தலா 2 மணி நேரம் பூஜை நடத்தி பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்படும்" எனத் தெரிவிக்கப்பட்டது. அரசுத் தரப்பில், "மாநாட்டுக்கு அனுமதி கே ாரிய மனு அடிப்படையில் நிகழ்ச்சி நிரல் குறித்து கேள்வி கேட்டதற்கு, மாநாட்டில் ஒரே நேரத்தில் 5 லட்சம் பேர் கந்த சஷ்டி கவசம் பாட இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. மாநாட்டில் பங்கேற்போர் குறித்த விவரத்தில் ஒரு இடத்தில் 20 ஆயிரம் என்றும், மற் றொரு பக்கத்தில் 5 லட்சம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கலந்து கொள்ளும் முக்கிய நபர்கள் குறித்த விவரங்கள் கேட்டால் தெரியவில்லை என்கிறார்கள். பெங்களூரு நகரில் சமீபத்தில் கிரிக்கெட் வெற்றி கொண்டாட்டத்தின் போது கூட்ட நெரிசல் ஏற்பட்டு அசம்பாவிதம் நடந்தது போல் நிகழ்ந்து விடக்கூடாது," எனத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் நீதிபதி, "முருக பக்தர்கள் மாநாட்டில் எவ்வளவு பேர் கலந்து கொள்கின்றனர் என்பது குறித்த விவரங்களை வழங்கினால் தான் போலீஸார் உரிய பாதுகாப்பு வழங்க முடியும். எனவே மாநாட்டுக்கு அனுமதி கோரிய பிரதான மனு தொடர்பாக போலீஸார் கேட்டுள்ள கேள்விகளுக்கு சரியான விளக்கத்தை மனுதாரர் அளிக்க வேண்டும். அதன் அடிப்படையில் போலீஸார் 2 நாளில் முடிவெடுத்து நீதிமன்றத்துக்கு தெரிவிக்க வேண்டும். மாநாட்டு வளாகத்தில் அறுபடை வீடுகளின் மாதிரி கோயில்களை அமைப்பதற்கான பணிகளை மேற்கொள்ளலாம். ஆனால், பூஜை கள் செய்யக் கூடாது. விசாரணை ஜூன் 13ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது" என உத்தரவிட்டார்.



# திருப்பூர் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது

திருப்பூர், ஜூன்.11-

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் கடந்த (09.06.2025) திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அவை அனைத்தும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டு வருகிறது.

அந்த வகையில், நேற்றைய தினம் நடை பெற்ற மக்கள் குறைதீர்ப்பு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா மற்றும் முதியோர் உதவித் தொகை, புதிய குடும்ப அட்டை வேண்டியும், சாலை வசதி, குடிநீர் வசதி வேண்டியும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 378 மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலையிலேயே விசாரனை செய்து அதன் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) சாம்சாந்தகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) மகாராஜ், (தேர்தல்) ஜெயராமன், தனித்துணை ஆட்சியர் (சமூகப் பாதுகா ப்புத்திட்டம்) பக்தவச்சலம், மாவட்ட வழங்கல் அலுவலர் ரவிச்சந்திரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் கல்பனா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் புஸ்பாதேவி, துணை ஆட்சியர்கள் மற்றும் அனைத்து அரசுத்துறைகளின் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# பௌர்ணமி மற்றும் அமாவாசை தினங்களில் தொடர் அன்னதான விழா

வேலூர், ஜூன்.11-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, செங்குட்டை அருகே, வைகாசி மாத பௌர்ணமியை முன்னிட்டு ஆர்.கே.பில்டர்ஸ் சார்பில் மாபெரும் அன்னதான விழா தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. வேலூர் மாநகராட்சியின் (திமுக) 1வது வார்டு கவுன்சிலரும், தொழிலதிபருமான அன்பு தலைமையிலும், ஆசிரியர் சச்சிதானந்தம் மற்றும் அன்னதான குழு நிர்வாகிகள் முன்னிலையிலும் அன்னதானம் வழங்கப்பட்டது.




■ திருவண்ணாமலை மாவட்டம் திருவண்ணாமலை வருகை தந்த தமிழ்நாடு சட்டமன்ற உறுதிமொழி குழு தலைவர் வேல்முருகன் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் காவல்துறை மரியாதை ஏற்ற போது உடன் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி மற்றும் உறுப்பினர்கள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




■ சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அண்ணல் அம்பேத்கர் ரெட்டைமலை சீனிவாசனார் சமுதாய மேம்பாட்டு சங்க 17 ஆம் ஆண்டு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் பத்தாம் வகுப்பு 12ஆம் வகுப்பு அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழாவும், உயர்கல்வி பயில கருத்துரையும், அம்பேத்கர் விருது, அறிவாசான் அயோத்திதாசர் பண்டிதர் விருது, ரெட்டைமலை சீனிவாசனார் விருது, வீரமங்கை குயிலி விருது வழங்கும் விழாவும் நடைபெற்றது. அண்ணல் அம்பேத்கர் ரெட்டைமலை சீனிவாசனார் சமுதாய மேம்பாட்டு சங்கத்தின் சார்பாக நடைபெற்ற விழாவில் மாணவர்களும் பொதுமக்களும் பெருமளவில் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.





# காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் புதுப்பிக்கப்பட்ட உமையாள் கலையரங்கத்தை வள்ளல் அழகப்பரின் பேரன் முனைவர் வைரவன் ராமநாதன் திறந்து வைத்தார்

காரைக்குடி, ஜூன்.11-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் உள்ள உமையாள் கலையரங்கத்தை சீரமைத்துப் புதுப்பிக்கும் பணி கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர் பெத்தாலெட்சுமியால் முன்னெடுக்கப்பட்டது.

அவரின் கோரிக்கையை ஏற்று, வள்ளல் அழகப்பரின் பேரன் முனைவர் வைரவன் ராமநாதன் தனது சொந்த நிதியிலிருந்து வழங்கிய பத்து இலட்சம் ரூபாய் மற்றும் கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்க நிதி ரூபாய் 4.65 இலட்சம் ஆகியவற்றின் மூலமாக உமையாள் கலையரங்கத்தைச் சீரமைத்து புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்றன. அனைத்து பணிகளும் முடிவடைந்து புதுப்பிக்கப்பட்ட புதுப்பொலிவுடன் கூடிய உமையாள் கலையரங்கத்தை மாணவர்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கல்லூரியின் பொறுப்பு முதல்வர் முனைவர் நிலோபர் பேகம் தலைமை வகிக்க, வள்ளல் அழகப்பரின் பேரனும் அழகப்பா கல்வி குழுமங்களின் தலைவருமான முனைவர் வைரவன் ராமநாதன் கலந்து கொண்டு புதுப்பிக்கப்பட்ட கலையரங்கத்தைத் திறந்து வைத்தார். மேலும் கலையரங்கத்தை சீரமைத்துப் புதுப்பிக்க நிதியுதவி அளித்தமைக்கு அவருக்கு கல்லூரி நிர்வாகத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் தாவரவியல் துறைத் தலைவர் முனைவர் கோமளவல்லி, புவி அமைப் பியல் துறை தலைவர் முனைவர் உதய கணேசன், தமிழ் துறைத் தலைவர் முனைவர் சிதம்பரம், இயற்பியல் துறைத் தலைவர் பேராசிரியர் கவிதா, வணிக வியல் துறைத் தலைவர் முனைவர் லதா, ஆங்கிலத் துறைத் தலைவர் முனைவர் ஜெயசாலா, அலுவலகக் கண்காணிப்பாளர் சண்முகநாதன், மற்றும் பேராசிரியர்களும், ஆசிரியர்களல்லாப் பணியாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



■ திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் திருப்பூர் மண்டல சார்பில் புதிய அரசுப் பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பொ.சாமிநாதன் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரசாமி, உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் குமார்,பொதுமேலாளர் சுப்பிரமணியன், திருப்பூர் மாநகராட்சி மண்டலம்4 தலைவர் பத்மநாபன் உட்பட்ட பலர் உடனிருந்தனர்.



■ திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னனு வாக்குப்பதிவு இயந்திர வைப்பறையை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் பிரமுகர்கள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார் திறந்து ஆய்வு மேற்கொண்டார்.உடன் வருவாய் கோட்டாட்சியர் அருள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வில்சன் ராஜசேகர், தேர்தல் தனி வட்டாட்சியர் செல்வ கணேஷ் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் உடனிருந்தனர்..



■ தென்காசி வடக்கு மாவட்ட முன்னாள் கழக செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் டாக்டர் செல்லதுரை சகோதரி யூனியன் சேர்மன் சுப்பம்மாள் பால்ராஜ் மகள் திருமண வரவேற்பு விழாவிற்கு மணமக்களை வாழ்த்த வருகை புரிந்த கடையநல்லூர் நகரக் கழகச் செயலாளர் அப்பாஸ் முன்னாள் நகர கழக செயலாளர் மு.க. சேகனா ஆகியோருக்கு டாக்டர் செல்லத்துரை சால்வை அணிவித்து வரவேற்றார்.



■ திருச்சி மாநகராட்சி மேயர் அன்பழகன், தலைமையில் மாநகராட்சி மேயர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் மாநகரின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் கோரிக்கை மனுக்களை மேயரிடம் அளித்தார்கள். மாநகர மக்களின் குறைதீர்க்கும் நாள் கூட்ட நிகழ்ச்சியில் துணை மேயர் திவ்யா, துணை ஆணையர் பாலு, மண்டத் தலைவர் துர்காதேவி, விஜயலட்சுமி கண்ணன், ஜெயநிர்மாலா, நகர் நல அலுவலர், செயற்பொறியார்கள், உதவி ஆணையர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள், மாநகராட்சி அலுவலர்கள் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டார்கள்.



■ திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டம் அமராவதி அணையில் இருந்து விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் சாமிநாதன், மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் தண்ணீரை திறந்து வைத்தனர்.உடன் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரசாமி, தலைமை பொறியாளர் (நிர்வாகத்துறை) முருகேசன், உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் குமார், திருப்பூர் மாநகராட்சி 4ஆம் மண்டல தலைவர் பத்மநாபன், செயற்பொறியாளர் சுப்பிரமணியன் ஆகியோர் உடன் இருந்தனர்.



■ திருப்பூர் மாநகராட்சி மண்டலம்4 வார்டு36 நஞ்சப்பா மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் உள்ள அறிவுசார் மையத்தை ஆணையாளர் (பொ) மகேஸ்வரி பார்வையிட்ட ஆய்வு மேற்கொண்டார்.உடன் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்

# கோயில் நிதியில் திருமண மண்டபம் கட்ட தடை: உயர் நீதிமன்றம் உத்தரவு

மதுரை, ஜூன்.11-

கோயில் நிதியில் திருமண மண்டபம் கட்டுவது தொடர்பான அரசாணைக்கு இடைக்கால தடை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரை மாவட்டம் எழுமலையைச் சேர்ந்த இந்து பிரச்சாரகர் ராம. ரவிகுமார், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: தமிழகத்தில் 27 கோயில்களில் ரூ.80 கோடி செலவில் திருமண மண்டபம் கட்டப்படும் என சட்டப்பேரவைக் கூட்டத்தில் அறநிலையத் துறை அமைச்சர் அறிவிப்பு வெளியிட்டார்.

அதன்படி பழனி முருகன் கோயிலின் உப கோயிலான கள்ளிமந்தையம் வரதராஜ பொருமாள் கோயிலுக்கு சொந்தமான காலியிடத்தில் ரூ.6.30 கோடியில் திருமணம் மண்டபம் கட்ட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. கோயில் நிதியில் திருமண மண்டபம் கட்டுவது அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானது.

எனவே, கோயில் நிதியில் திருமண மண்டபங்கள் கட்டுவது தொடர்பாக தமிழக அரசு 16.5.2025ல் பிறப்பித்த அரசாணையை ரத்து செய்ய வேண்டும். அந்த அரசாணையை செயல்படுத்த இடைக்கால தடை விதித்து உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், ஏ.டி.மரியகிளாட் அமர்வில் விசாரணைக்கு வந்தது. பின்னர் கோயில் நிதியில் திருமணம் கட்டுவது தொடர்பான அரசாணைக்கு இடைக்கால தடை விதித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161